Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04

விலை ரூப 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ மீ ஆனி 32 ஆம் உ திங்கட்கிழமை (16 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 22 ஓசை 148

## விமானங்கள், ஹெலிகள் வாங்க சிறிலங்கா கேள்விப்பத்திரங்கள் கோரல்

(கொழும்பு)

போர்விமானங்களையும், ஹெலிகப்டர்களையும் வாங்குவதற்கு இலங்கை பாது காப்பு அமைச்சு ஆயுதங்களை விற்பனைசெய்யும் நாடுகளிடம் இருந்து கேள்விப் பத்திரங்களை (ரென்டர்) கோரியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் இரா ணுவ நடவடிக்கைகளுக்குத் துணையாக விமானப்படையில் சேர்ப்பதற்கு இவ் விமானங்கள் வாங்கப்படவுள்ளன. அண்மையில் போர் தொடங்கியதில் இருந்து விமானப்படையையும், கடற்படையையும் பலப்படுத்துவதில் சிறிலங்கா அரசு தீவிரமாக முனைந்துள்ளது. •

மண்டைதீவு, அல்லைப்பிட்டி

# யாழ். கடற்கரைகளில் ஒதுங்கும் சடலங்கள்!

## பெண்களும் சிறுவர்களும் அதிகம்; கடற்படை தாக்கிய அகதிகளா?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரை அண்மித்த மண்டைதீவு, அல்லைப்பிட்டி, குருநகர் கடற்கரைப் பகுதியில் பெண்கள், குழந்தைகள் உட்பட இருபது சடலங்கள் அடையா ளம் தெரியாத நிலையில் கடந்த இரண்டு தினங்களில் ஒதுங்கின. இச் சடலங்கள் இப்பகுதி மக்களால் அடக்கம் செய்யப்பட்டன. சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடி களுக்கு அஞ்சி தமிழ் நாட்டுக்கு படகுகள் மூலம் அகதிகளாகச் சென்றவர்கள் வழியில் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டதன் விளைவாகவே இச் சடலங் கள் கரையொதுங்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மாலை ஆறு மணியளவில் முப்பத் தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் சடலமும் ஏழு வயது மதிக்கத்தக்க சிறுமியின் சடலமும் மண்டை தீவுக் கரையில் ஒதுங்கின.

இதே தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் அல் லைப்பிட்டி தென்கரையில் பன்னிரெண்டு வயது முதல் முப்பத்தைந்து வயது வரை மதிக்கக்கூடிய ஆறு பெண் களின் சடலங்கள் கரை யொதுங்கின. இவர்களில் பதி னைந்து, இருபது, இருபத் தைந்து வயது மதிக்கக்கூடிய வயதும், பன்னிரெண்டு வய தும் மதிக்கத்தக்க இரண்டு ஆண் சடலங்களும், ஏழு வய தும், பன்னிரெண்டு வயதும் மதிக்கத்தக்க பெண்களின் சடலங்களும் கிடந்தன. இந்த றோலர் வள்ளத்தில் இரத்தக் கறைகளும் கிடக்கக் காணப் பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

### குருநகர் கரையில் ஒதுங்கிய பெண் சடலம்

(விசேட நிருபர்)

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குருநகர் தொடர் மாடிப் பகுதிக் கடலில் பெண் ணின் சடலமொன்று கரை ஒதுங்கியது.

யில் வெள்ளை நீலநிற பூக் கள் காணப்பட்ட சடலம் பட்டிவலை ஒன்றில் சிக்கிக் கிடந்தது.


தங்க மூக்குத்தி, வெளிறிய றோல்கோல்ட், சங்கிலி, தோடு

### இரு விமான ஓட்டிகள் பலி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரு விமான குண்டுவீச்சு வீரர் கொல்லப்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. வவுனியாவிலிருந்து அனு ராதபுரத்திற்கு காய மடைந்த சிறிலங்கா இரா ணுவத்தினரை ஏற்றிச் சென்ற ஹெலிகப்டர்

(4ஆம் பக்கம் பார்க்க)



மானிப்பாயில் சில தினங்களுக்கு முன்னர் தமிழீழ மீட்பு நிதிக்கு பவுண் வழங்குவதற்காக திரண்டிருந்த மக்களையே படத்தில் காண்கிறீர்கள்.

## வெளியார் தலையிட அனுமதிக்க முடியாதாம்

### இந்தியாவைத் தலையிடச் செய்ய புலிகள் முயற்சி என்கிறார் பிரேமா!

(இரத்தினபுரி)

"இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிச் சம்பவங்கள் இலங்கையின் உள் நாட்டுப் பிரச்சினையாகும். இப் பிரச்சினையில் வெளிநாட்டவர் எவரின் தலையீட் டிற்கும் அனுமதிக்க முடியாது'' என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேம தாசா இரத்தினபுரியில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

இந்தியாவை வடக்குக்கிழக் குப் பிரச்சினையில் தலையிடச் செய்வதற்காகவே வடக்குக் கிழக்கிலிருந்து பெருமளவில் தமிழர்களை இந்தியாவுக்கு அகதிகளாக அனுப்புவதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள் ளனர் என்றும் பிரேமதாசா கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸில்சேர முண்டியடித்தவர்கள் சுதந்திரப் போருக்குத் தயார் இல்லை

### அவமானம் என்கிறார் யோகி

(வண்ணார்பண்ணை)

அண்மையில் யாழ். கோட் டை இராணுவ முகாமிற்கரு கில் சிறிலங்கா பொலீசுக்காக ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட் சைகள் நடத்தப்பட்டபோது எமது பகுதியில் இருந்த படி த்த இளைஞர்கள், உடல் தாரிகள், செயல்திறன் மிக்க வர்கள் எனதம்மை எண்ணிக் கொண்டவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் சிங்களபொலீ சிடமும் சிங்கள இராணுவத் திடமும் அடிபணிந்து வேலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு வீசிக்

### கப்பல் அனுப்பக் கோரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடக்குக்கிழக் குப் பகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் தமிழ் அகதி களின் தொகை இருபத்தை யாயிரத்தையும் தாண்டிவிட்ட தாக இலங்கைத் தமிழ் அகதி கண்காணிப்பு அதிகாரி திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

களுக்கு அஞ்சி தமிழ் நாட்டுக்கு படகுகள் மூலம் அகதிகளாகச் சென்றவர்கள் வழியில் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டதன் விளைவாகவே இச் சடலங்கள் கரையொதுங்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மாலை ஆறு மணியளவில் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் சடலமும் ஏழு வயது மதிக்கத்தக்க சிறுமியின் சடலமும் மண்டைதீவுக் கரையில் ஒதுங்கின.

இதே தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் அல்லைப்பிட்டி தென்கரையில் பன்னிரெண்டு வயது முதல் முப்பத்தைந்து வயது வரை மதிக்கக்கூடிய ஆறு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கின. இவர்களில் பதினைந்து, இருபது, இருபத்தைந்து வயது மதிக்கக்கூடிய இளம் பெண்களின் சடலங்களும் இருந்தன.

இதே அல்லைப்பிட்டி தென்கரையில் கடந்த சனிக்கிழமை இந்திய மீன்பிடி றோலர் வள்ளமும் கரையொதுங்கியது. இந்த வள்ளத்தில் முப்பது வயதும், பன்னிரெண்டு வயதும் மதிக்கத்தக்க இரண்டு ஆண் சடலங்களும், ஏழு வயதும், பன்னிரெண்டு வயதும் மதிக்கத்தக்க பெண்களின் சடலங்களும் கிடந்தன. இந்த றோலர் வள்ளத்தில் இரத்தக் கறைகளும் கிடக்கக் காணப்பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

ணுவத்தினரை ஏற்றிச் சென்ற ஹெலிகப்டர்

(4ஆம் பக்கம் பார்க்க)

தாசா இரத்தினபுரியில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

இந்தியாவை வடக்குக்கிழக்குப் பிரச்சினையில் தலையிடச் செய்வதற்காகவே வடக்குக் கிழக்கிலிருந்து பெருமளவில் தமிழர்களை இந்தியாவுக்கு அகதிகளாக அனுப்புவதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் பிரேமதாசா கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் கரையில் ஒதுங்கிய பெண் சடலம்

(விசேட நிருபர்)

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குருநகர் தொடர்மாடிப் பகுதிக் கடலில் பெண்ணின் சடலமொன்று கரை ஒதுங்கியது.

நீலநிற மேற்சட்டையும், நீலநிற தடித்த கரையைக் கொண்ட தண்ணிநீல சேலையில் வெள்ளை நீலநிற பூக்கள் காணப்பட்ட சடலம் பட்டிவலை ஒன்றில் சிக்கிக் கிடந்தது.

தங்க மூக்குத்தி, வெளிறிய றோல்கோல்ட் சங்கிலி, தோடு என்பன சடலத்தில் இருந்து மீட்கப்பட்டு உறவினர் அடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸில்சேர முண்டியடித்தவர்கள் சுதந்திரப் போருக்குத் தயார் இல்லை

## அவமானம் என்கிறார் யோகி

(வண்ணார்பண்ணை)

அண்மையில் யாழ். கோட்டை இராணுவ முகாமிற்கருகில் சிறிலங்கா பொலீசுக்காக ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டபோது எமது பகுதியில் இருந்த படித்த இளைஞர்கள், உடல்வாகு கொண்டவர்கள், பட்டதாரிகள், செயல்திறன் மிக்கவர்கள் எனதம்மை எண்ணிக் கொண்டவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் சிங்களபொலீசிடமும் சிங்கள இராணுவத்திடமும் அடிபணிந்து வேலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் அனுப்பக் கோரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் தமிழ் அகதிகளின் தொகை இருபத்தையாயிரத்தையும் தாண்டிவிட்டதாக இலங்கைத் தமிழ் அகதி கண்காணிப்பு அதிகாரி திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீசிக் காடு எரிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் மதுரங்குளிக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த அவ்ரோ விமானமொன்று ஆறு குண்டுகளை வீசியது. இதைத் தொடர்ந்து இப்பகுதியில் காடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

# பூநகரிக் கரையில் மூன்று ஆணின் சடலங்கள்

(விசேடநிருபர்)

பூநகரி, கல்முனை, ஒருகரை என்னும் இடத்தில் மேலும் மூன்று ஆண்களின் சடலங்கள் நேற்று முன்தினம் (14 - 07 - 90) சனிக்கிழமை காலைகரைஒதுங்கியதாக அறிவிக்கப் படுகிறது.

இதுவரை யாழ்-குடாக் கடலில் பெண் ஒருவர் உட்பட ஆறு சடலங்கள் கரை ஒதுங்கி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மன்னார் பகுதியில் இருந்து அகதிகளாக தமிழ்நாடு சென்றுகொண்டிருந்த படகொன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கூட்டம்

யாழ். பரியோவான் கல்லூரியில் நாளை 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு க.பொ.த.சாதாரண உயர்தர மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சகல மாணவர்களும் சமுகம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# வி. பி. சிங் தொடர்ந்தும் பாரத பிரதமராக இருக்கச் சம்மதம்

## டில்லி அரசியல் நெருக்கடி தணிந்தது

(புதுடில்லி)

பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதாக தேசியமுன்னணித்தலைவருக்கும் ஜனதாதள் கட்சித் தலைவருக்கும் கடிதம் எழுதியிருந்த இந்தியப் பிரதமர் வி. பி. சிங் ஆளும் கட்சிக் கூட்டணித் தலைவர்கள் எடுத்த பகீரதப் பிரயத்தனங்களைத் தொடர்ந்து தாம் தமது பதவி துறக்கும் முடிவை வற்புறுத்தப் போவதில்லையென்று ஒப்புதல் அளித்துள்ளார். திரு. வி. பி. சிங் தொடர்ந்தும் இந்தியாவின் பிரதம மந்திரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தால் வெல்ல முடியாது; அரசியல் தீர்வே வேண்டும்!

## -மேஜர் ஜெனரல் டி. எஸ். டி. சில்வா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இராணுவத்தினரால் வெற்றிகொள்ளமுடியாதென்று சிறிலங்கா இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண படை அணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் டி. எஸ். டி. சில்வாவே மேற்கண்டவாறுகூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வரும்வகையில் இலங்கை அரசு அரசியல் தீர்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் ஏஜென்சி செய்திக்கு கூறியதாக இந்தியா வானொலி அறிவித்துள்ளது.

1987ஆம் ஆண்டிலிருந்த நிலையைவிட விடுதலைப்புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான போரில் இரத்த ஆறு ஓடும்

(கொழும்பு)

''தமிழீழ விடுதலைப் புலிகள் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றவர்கள். அவர்களுடன் இலங்கைப் படையினர் போர் தொடுத்து எளிதில் வெல்ல முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது'' என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ''தி ஐலண்ட்'' பத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சந்தேகத்திற்கு உரியவர்கள்

(சென்னை)

''ராடர்'' கருவிகள் பொருத்தப்பட்ட இரண்டு படகுகளில் இன்றைய காலகட்டத்தில் இந்திய கடல் எல்லையை அத்து மீறிய பதினாறு சிங்களவர்களினதும் நடவடிக்கை பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி பொலிஸ் நிலையத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள இந்த பதினாறு சிங்களவர்களும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இந்த சிங்களவர்கள் மீனவர்களாக இருப்பினும் கூட தமிழர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வடக்கு, கிழக்கு கடல் பகுதிக்கு தொழில் நிமித்தம் வருவதற்கான நியாயம் இல்லையென தமிழ் நாடு பொலிஸ் பகுதியினர் சந்தேகம் எழுப்பியுள்ளனர், இந்தியாவின் எல்லைக்குள் வந்தற்கான சரியான காரணத்தை இந்தச் சிங்களக் கைதிகள் இன்னும் தெரிவிக்கவில்லை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பணமும் வழங்கலாம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு பவுணாக தற்பொழுது வழங்க முடியாத நிலையில் உள்ளவர்கள் அதற்குப் பதிலாக 10,000 ரூபாவை வழங்கலாம் எனத் தெரியவருகின்றது.

# கொக்காவிலிருந்து கிளிநொச்சிவரை

# இரு தினங்கள் தொடர்ந்து விமானத்தாக்குதல்

## கால்நடைகள் அழிப்பு; காடுகள் எரிப்பு; கடைகள் அலுவலகங்கள்சேதம்; விவசாயம் நாசம்

(கிளிநொச்சி)

கொக்காவிலிலிருந்து கிளிநொச்சி வரை உள்ள சகல கிராமங்களும் கடந்த இரண்டு நாட்களாகக் குண்டு வீச்சு விமானங்களினாலும், ஹெலிகொப்ரர்களினாலும் தாக்கப்பட்டன.

இத்தாக்குதல்களினால் கிளிநொச்சி வைத்தியசாலை, கச்சேரி, விவசாய அலுவலகம், தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகள், அனாதை இல்லம், வீடுகள், கடைகள் ஆகியன சேதமாகின. பலர் காயமடைந்தனர். கால்நடைகள் இறந்தன. றான்ஸ்போமர் ஒன்றும் சேதமடைந்தது.

முதலாம் நாளான வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவில் வேவு பார்க்கும் விமானம் ஒன்று கொக்காவிலில் இருந்து கிளிநொச்சி வரையான சகல கிராமங்களையும் நோட்டமிட்டுச் சென்றது.

அதைத் தொடர்ந்து 2 குண்டு வீச்சு விமானங்களும், 2 ஹெலிக்கொப்ரர்களும் உயரப் பறந்துவந்தன.

இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் 2 மணி நேரத்திற்கு மேலாககொக்காவிலில் பாரிய குண்டுகளை மாறி மாறிப் போட்டன.

கொக்காவில் தொலைத் தொடர்பு நிலைய இடிபாடுகளைச்சுத்தம்செய்துகொண்டு நின்ற விடுதலைப் புலிகளை நோக்கியும், பொதுமக்களை நோக்கியும் குண்டு வீச்சு விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தன. விடுதலைப் புலிகளும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

அதேவேளை 2 ஹெலிக்கொப்ரர்கள் முருகண்டி 153ம் கட்டை, இரணைமடுச் சந்தி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி, கனகபுரம் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ''பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல''

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து வீடு வாசல்களையும் உடமைகளையும் இழந்து அகதியாகி யாழ்ப்பாணம் நோக்கி ஓடிவரும் போது கையில் எடுத்துவந்த நகை, பணத்தையும் வழியில் பறிகொடுத்த நபரை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தும்கூட விதி விடவில்லை.

நேற்று முன்தினம் யாழ். கச்சேரிக்கு முன்பாக இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சு சம்பவத்தில் உயிரிழந்த ஐவரில் ஒருவரான எஸ். பாலச்சந்திரன் என்பவரே பிரஸ்தாப விதிவசப்பட்ட நபராவார்.

கடந்த மாதம் 20ஆம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கோவில்களுக்கு தேவையான பூசைமணி, அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம் கும்பசெம்பு அடுக்குத்தீபம், பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ்:- 297, K.K.S றோட், தற்போது:- 76/2 நாவலர், றோட், சோனக) தெரு, யாழ்ப்பாணம். (R-517)

# வீணாக நேரத்தைக் கழிக்காமல் பயிர்ச்செய்கையில் ஈடுபடுங்கள்

(யாழ்ப்பாணம்)

''போராளிகள் எமக்காகவும், எமது மண்ணை பாதுகாப்பதற்காகவும் தான் போராடி வருகின்றார்கள். இந்தப் போராட்டத்தில் காயமடைந்த போராளிகளை அருகிலிருந்து அன்புடன் பராமரித்து, பேணி அவர்களை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது''

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரிய குளம் புதிய உயர் கல்லூரியின் சமூக சேவைப் பிரிவான ''தென்றல்'' ஆரம்ப கூட்டத்தில் பேசுகையில் அ. குமாரவேலு இவ்வாறு கூறினார்.

என். குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் குமாரவேலு மேலும் பேசுகையில் கூறியதாவது.

கல்வியானது இரண்டொரு வருடங்களுக்கு தடைப்படின், அவர்கள் பெற்ற கல்வியின் தரம் மூழ்கடிக்கப்படமாட்டாது. அவரவர் தொடர்ந்தும் தமது கல்வியை பின்பும் தொடர முடியும். ஆனால் இக்கட்டான இக் காலகட்டத்தில் அல்லலுறும் மக்களின் துயர் தீர்க்கவும் சமூகப்பணியாற்றவும். மாணவர்கள் பின்னிற்கக் கூடாது.

குழந்தைவேல் பேசுகையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளுக்கு வழி காணும் வகையில் மாணவர்கள் அனைவரும் வீணாக நேரத்தை கழிக்காமல் உப உணவுப்பயிர்களை வீட்டுத் தோட்டங்களில் வளர்த்து உணவுத்தேவையை நாமே பூர்த்தி செய்யும் நிலையை உருவாக்க வேண்டும் என்றார்.

கா. யோ. கிரிதரன் பேசுகையில் சிங்கள அரசின் பாரிய இராணுவ நடவடிக்கைகளால் காயமடைந்தவர்களுக்கு உதவும் முகமாக இரத்ததானம் செய்ய சகல மாணவ மாணவிகள் முன்வருதல் இக் கால கட்டத்தில் அவசியமான தொன்றாகும் என்றார்.

# சௌதாலா பதவி விலக வேண்டியதில்லையாம்

## தகப்பன் தேவிலால் கூறுகிறார்

(டில்லி)

இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங் தனது ராஜினாமாக் கடிதத்தை திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என துணைப் பிரதமர் தேவிலால் கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட தேவிலால் இவ் வேண்டுகோளை பிரதம மந்திரி வி. பி. சிங்கிடம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா பதவி விலகத் தேவையில்லை என்றும், அவர் சட்ட மன்றத் தலைவராக ஒருமனதாக தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.

மேலும் இவர், வி. பி. சிங்கிற்குத் தெரிவிக்கையில் சில மத்திய அமைச்சர்கள் தமது பதவி விலகல் கடிதத்தை கொடுத்துவிட்டு பத்திரிகையாளர்களிடம் அதைத் தெரிவிப்பது தேவையில்லாதது என்றும் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் இவர்கள் கட்சிகளிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள் என்றும் குற்றம் சாட்டினார்.

# அரச அதிபர் கச்சேரியைப் பார்த்தார்

(வவுனியா)

வவுனியாக் கச்சேரியை இராணுவத்தினரின் அனுமதி பெற்று அரச அதிபரும், சில அதிகாரிகளும் சென்று பார்வையிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கச்சேரிக் கட்டிடம் இராணுவத்தின் குண்டுவீச்சுத் தாக்குதலால் பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய உணவு பங்கீட்டு அட்டைகள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள பல நோ. கூ. சங்கங்கள் தத்தம் பகுதியில் உள்ள மக்களைப் பதிவு செய்து, அவர்களுக்குப் புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்குகின்றன. உணவுப் பொருட்கள் இனிக் குடும்பத்தில் எத்தனை அங்கத்தவர் என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. ரூபா 1500/-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் உலர் உணவு கொடுப்பனவும் நிறுத்தப்படவுள்ளது. (43)

## யாழ். மாவட்டத்திற்கு

# வட மாகாண மாவட்டங்களில் இருந்து அரிசிக் கொள்வனவு

யாழ், மாவட்டத்திற்கு, ஏனைய வட மாகாண மாவட்டங்களில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

வெளி மாவட்டங்களில் இருந்து பெருமளவு அகதிகள் யாழ். மாவட்டத்திற்கு வருவதனால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தேவையும் அதிகரித்து வருகிறது. அதே வேளை அரசும் யாழ். மாவட்டத்திற்குப் போதியளவு உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கவில்லை. இதனால் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அரிசியை வெளி மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து இங்கு கொண்டுவருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (ம)

## பயிற்சி நெறி

திறந்தபல்கலைக்கழக யாழ். பிரதேச நிலையத்தில் நடைபெற்று வந்த கொம்பியூட்டர் பயிற்சி நெறி நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கே நடைபெறுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புநிலைமைக்கு அமையவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

உ
சிவமயம்

கோண்டாவில் கிழக்கு
ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின்
இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பிரமோதூத ஹு ஆனி மீ 32 ஆம் நாள் (16 - 07 - 1990) அச்சுவினி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் திங்கட்கிழமையும் கூடிய சுபதினத்தில் மாலை 3 - 00 மணிக்கு அம்பிகைக்கு ஸ்நபனா அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று இலட்சார்ச்சனை பிரமஸ்ரீ ச. ஸ்ரீஸ்கந்தக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும். பின்பு அம்பிகை வீதி உலாவருவார். இங்ஙனம் பத்துத்தினங்கள் நடைபெற்று, ஆடிப்பூர நன்னாளில் இலட்சார்ச்சனை நிறைவெய்தும்.

அடியார்கள் யாவரும் பத்துத்தினங்களும் வந்து அம்பிகையின் அருட் பிரசாதத்தை பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

(R/521)

* BATA ஏஜென்சி *
யாழ் ரேட் சென்றர்

11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் முகவரியில்

இயங்கிவந்த
எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின்
பாதுகாப்புக் கருதி கீழ்க்காணும் முகவரிக்கு
மாற்றப்பட்டுள்ளது.

யாழ் ரேட் சென்றர்

325, பலாலி றோட்,
சென்றல் நேசிங் ஹோம் சந்தி
யாழ்ப்பாணம்.

(B.1260)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

### வீரவேங்கை ஸ்ராலிங்

### ச. தயபாலசிங்கம் (தயா)

| அன்னை மடியில் | தமிழ் அன்னை அடியில் (வீரமரணம்) |
|---|---|
| 14-11-1969 | 16-06-1990 |

பூநகரி நல்லூராம் புனிதனாய் உதித்திட்ட
தயாளா உன் பிரிவால் தவிக்கின்றோம்
எம் அரவணைப்பில் அன்புருக நின்றாயே
உன் உற்றார் உறவினரை உதறித்தள்ளிவிட்டு
சிதைவுற்ற தேசத்தை மீட்பதற்கு சென்றாயோ
உன் பாதம் பட்ட புற்தரைகள்
செழிப்புற்று ஓங்குதடா
கழித்திடும் நாட்கள் இது
எம் இதயங்கள் கருகுதடா.

தந்தை, தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்.

யோகன்
பளைஜோட்

(B/ 1262)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
18
-
02
-
1953



மறைவு
16
-
06
-
1990

இடம்மாற்றம்

எமது வாடிக்கையாளர்களே!
எமது பிடைவை ஸ்தாபன இடமாற்றம்

(16 - 07 - 1990) அச்சுவினி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் திங்கட்கிழமையும் கூடிய சுபதினத்தில் மாலை 3 - 00 மணிக்கு அம்பிகைக்கு ஸ்நபனா அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று இலட்சார்ச்சனை பிரமஸ்ரீ ச. ஸ்ரீஸ்கந்தக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும். பின்பு அம்பிகை வீதி உலாவருவார். இங்ஙனம் பத்துத்தினங்கள் நடைபெற்று, ஆடிப்பூர நன்னாளில் இலட்சார்ச்சனை நிறைவெய்தும்.

அடியார்கள் யாவரும் பத்துத்தினங்களும் வந்து அம்பிகையின் அருட் பிரசாதத்தை பெற்று ஏகும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

(R/521)


## யாழ் ரேட் சென்றர்

325, பலாலி றோட்,
சென்றல் நேசிங் ஹோம் சந்தி
யாழ்ப்பாணம்.

(B.1260)


பிரதேச நிலையத்தில் நடைபெற்று வந்த கொம்பியூட்டர் பயிற்சி நெறி நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கே நடைபெறுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புநிலைமைக்கு அமையவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 02 - 1953 | 16 - 06 - 1990 |

### திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம்

பத்து மாதம் சுமந்து பெற்றவர்
பாரினிலே பரிதவிக்க
மணநாளை குறித்து எல்லோரும்
மகிழ்வோடு காத்திருக்க...
காலன் உம்மை தன் நாளுக்கு
எம்மிடம் இருந்தே பிரித்தே விட்டான்.

ஐயனார்கோவிலடி,
நாவற்குழி,
கைதடி.

இங்ஙனம்
பெற்றோர், சகோதர
சகோதரிகள்,

(B.1259)


## இடம்மாற்றம்

### அம்பிகாபதி பென்சி கூட்ஸ்

66, பெரிய கடை வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**இல. 54, அம்மன் றோட்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

09-07-1990 திங்கட்கிழமை தொடக்கம் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

(B/1247)



## எமது வாடிக்கையாளர்களே!

எமது பிடைவை ஸ்தாபன இடமாற்றம்

## சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

இல: 23, பெரியகடை வீதியில் இயங்கிய எமது ஸ்தாபனம்
பாதுகாப்புக் காரணமாக
கீழேயுள்ள முகவரியில் உங்கள் நன்மை கருதி இயங்குகின்றது.

உங்கள் உள்ளங் கவர்ந்த புடைவைத் தினுசுகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

⊞ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ் ⊞
இல. 115, அரசடி வீதி, கந்தர்மடம்.

(B.1254)



## உங்கள் தேவைக்குகந்த....

தரம்வாய்ந்த நவீன டிசைன்களிலான **மரத் தளபாடங்களின்** மொத்த விற்பனையாளர்கள்

சகலவிதமான மர வகைகளும் **அரிவு வேலை** குறித்த தவணையில் செய்து கொடுப்பவர்கள்

# மூர்த்தி அரிவு ஆலை

51/1, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை மேற்கு,

யாழ்ப்பாணம்.

(B/1256)

### சிந்தனைக்கு

நிகழ் காலத்தை விலை கொடுத்துத்தான் எதிர்காலம் வாங்கப்படுகிறது.

- ஸேம்யல் ஜான்ஸன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 16-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## ஒத்திவைப்பா, பகிஷ்கரிப்பா?

கல்விப்பொதுத்தராதரப்பத்திரப்பரீட்சை (உயர்தரம்) அடுத்த மாதம் நடைபெறுவதற்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. திட்டமிட்டபடி இப்பரீட்சையை நடத்துவதற்கு உயர்கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இப்போதுள்ள நிலையில் ஜீ. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சை மட்டுமல்ல எந்தப் பரீட்சைதானும் நடத்த முடியுமா, நடத்தலாமா?

வானத்தில் குண்டுவீச்சு விமானங்கள் எந்த இடத்தில் எந்த நேரத்தில் குண்டுகளை வீசித்தாக்கும் என்று தெரியாது.

எந்த இடத்தில் எந்த நேரத்தில் எரிகுண்டு பீப்பாக்கள்விழுந்து பற்றி எரியுமென்று சொல்லமுடியாது.

ஹெலிக்கொப்ரர்கள் எந்த நேரத்தில் வானில் தோன்றி எங்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமென்று எதிர்பார்த்திருக்க முடியாது.

இராணுவ முகாம்களிலிருந்து எந்த நேரத்தில் எந்தத் திசைகளில் ஷெல் அடிக்கப்படும் என்று காத்திருந்து தப்ப முடியாது.

இந்த நிலையில் எந்தப் பரீட்சை நிலையத்தில் எப்படி வினாக்களுக்கு விடை எழுத முடியும்?

குண்டு வீச்சினாலும் ஷெல் அடியினாலும் தகர்க்கப்பட்டவீடுகளிலிருந்து உயிரைக்காப்பாற்றுவதற்காக உடுத்த உடையுடன் வெளியேறி அகதிமுகாமில் தஞ்சமடைந்திருப்பவர்கள்பரீட்சைக்குத்தோற்றுவதற்காகப் பாடப் புத்தகங்களை மறக்காமல் எடுத்து வந்திருக்க முடியுமா?

திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் வீடுவீடாகப் புகுந்து தமிழ் இளைஞர்களை கைது செய்தும் சித்திரவதை செய்தும் அட்டகாசம் புரியும்போது அவர்கள் அடுத்தமாதம் தோற்றவிருக்கும் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சைக்கு வரவிருக்கும் கேள்விகள் பற்றியும் அதற்கான விடைகள் பற்றியும் ஒரு கணமேனும் சிந்திக்க முடியுமா?

சிங்களக் காடையர்கள் இப்பகுதிகளில் இளைஞர்களையும் யுவதிகளையும் குறிவைத்து நுழையும்போது அவர்களிடமிருந்து உயிரையும் உடலையும் காப்பாற்றிக் கொள்வதற்கு பாதுகாப்பான இடம் தேடி ஓடுவார்களா

# போர்க்காலச் சிந்தனைகள்

## தவிர்த்திருக்கலாமா? —— 2

'மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற ஒரு சிறு சம்பவமே இன்றைய போருக்குக் காரணமாகும்'

அந்தச் சிறு சம்பவத்தைப் பெரிது படுத்தாது விட்டுருந்தால் இன்று நடைபெறும் இரத்தக் களரியைத் தவிர்த்திருக்கலாம்.

அந்தச் சம்பவத்தோடு சம்பந்தப்பட்டவர் ஒரு தமிழர் என்றாலும் பரவாயில்லை. ஒரு முஸ்லிமுக்காக திடீரென மோட்டுத்தனமான போர் ஒன்றைத் தொடங்கியிருக்கத் தேவையில்லை.

-இப்படி சில விமர்சகர்கள் கூறக் கேட்கிறோம்.

பிரேமதாசா மிக மிக கீழே இறங்கி வந்து விட்டார். இராணுவ முகாம்கள் பலவற்றை எடுத்து விட்டார். விடுதலைப் புலிகள் கேட்டதை எல்லாம் தருவதாக ஒப்புக் கொண்டு விட்டார். இந்த நிலையில் பொறுத்திருக்க வேண்டும். புலிகள் அவசரப் பட்டு விட்டார்கள்.

-இப்படிச் சில அரசியல் விற்பன்னர்கள் கூறக்கேட்கிறோம்.

புலிகளுக்கு தலைக்கனம், அவர்களுக்கு இராச தந்திரம் என்றால் என்ன என்றே தெரியாது. தமது இராணுவ வெற்றியை அரசியல் நயமாக மாற்றத் தவறி விட்டார்கள்.

- இப்படி விவாதிக்கப் படுவதையும் கேட்கிறோம்.

இவர்கள் எல்லாம் நல்லெண்ணமுடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் மக்கள் போரில் சிக்கித் தவிக்காமல் வாழ வேண்டும் என்பதே இவர்களின் விருப்பம் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவர்கள்தான் தமிழினத்தின் படித்த மேதைகள்.

தமிழ் மக்கள் மத்தியிலே இத்தகையவர்களுக்கு என்றுமே பஞ்சமிருந்ததில்லை.

இவர்களே இந்திய இராணுவம் சென்றவுடன் இங்கு நிரந்தர அமைதி ஏற்பட்டு விட்டது என நம்பியவர்கள்.

இவர்களே இனப் பிரச்சனைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணலாம் என 'புத்தக ஞானம்' கொண்டுள்ளவர்கள்.

படித்த பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்ததாம் என்பது பொய்யா?

இவர்கள் புத்தகப் பூச்சிகளாக இருக்கலாம், மேதாவிலாசமுடையவர்களாக இருக்கலாம்! ஆனால் இவர்களுக்கு பகுத்தறிவு கிடையாது.

இவர்கள் சிங்களவர்களுடன்படித்திருக்கலாம், பழகியிருக்கலாம், உடனிருந்து உண்டிருக்கலாம்; ஆனால் சிங்களவரின் உள்ளத்தை இவர்கள் காணவில்லை.

தனிப்பட்ட முறையில் அவனைப் போல நல்லவனும் இவ்வுலகில் இல்லை; மாறாக நான்கு பேர் சேர்ந்து விட்டால் அவனைப் போன்ற கெட்டவனும் இவ்வுலகில் கிடையாது.

### இரத்தினம்

இந்த கெட்டதன்மையையே அரசியல்வாதிகள் நன்கு பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிட்டவர்களுக்குத் தெரியாது.

இந்தியா சுதந்திரமடைந்த போது அதன் சாதகத்தில் ஊழல் என்பதையும் பாகிஸ்தானின் சாதகத்தில் இராணுவ ஆட்சியையும் இறைவன் எழுதி விட்டான் என கண்ணதாசன் கூறியதையொட்டி இலங்கையின் சாதகத்திலும் இனப்பிரச்சினை-போர் என்றே எழுதிவிட்டான் என்றே கூறவேண்டும்.

இன்று நடைபெறும் போர் ''எப்பவோமுடிந்த காரியம்.''

மட்டக்களப்புச் சம்பவம் ஒரு தீப்பொறியேயன்றி போருக்கான காரணம் அல்ல

புலிகளுக்கும் அரசுக்குமிடையே நிலவிய நட்புறவு தேவை கருதியது; தற்காலிகமானது;

புலிகளை பிரேமதாசா நம்பினார்; ஆனால் அவரின் அரசு நம்பவில்லை.

பிரேமதாசாவை புலிகள் நம்பினார்கள்; ஆனால் பிரேமதாசாவின் படையை, குறிப்பாக பொலிஸ்படையை, அவர்கள் நம்பவில்லை.

ஜே. ஆர்- ராஜீவ் உடனடிக்கையை அலட்சியப் படுத்தி விட்டு சிங்கள அரசு சீனாவிடமிருந்து ஆயுதங்களை வாங்கியும். பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சிகளைப் பெற்றும் போரொன்றுக்கு மிகத்தீவிரமாக ஆயத்தம் செய்கிறது என்பது புலிகளுக்குத்தெரியும்.

புலிகளும் ஆயுதங்களை வாங்குகிறார்கள் என்பது: அரசுக்குத் தெரியும்

இந்த நிலையில் சமாதானத்தை நிலைநாட்டுவது கயிற்றில் நடப்பது போன்றே இருந்தது

பிரேமதாசா நடக்க முயற்சித்தார்; என்பதில் ஐயமில்லை.

தனது ஆட்சிக்காலத்தில் சண்டை சச்சரவில்லாமல் அமைதி நிலவவேண்டும் என்றும்,

தனது ஆட்சியில் மக்கள்-சாதாரண மக்கள் - மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்றும்;

தனது ஆட்சியின்போது இலங்கையின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பிவிட வேண்டும் என்றும்,

பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த ஜனாதிபதி என வரலாற்றில் இடம் பெறவேண்டும் என்றும்,

தனது ஆட்சி நிலை பெற்றிருக்க வேண்டின் போர் ஒன்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும்,

பிரேமதாசா விரும்பினார் ஆனால்...?

(தொடரும்)

# நாட்டைக்காக்கும் போரில் சோவியத் பெண்கள் வகித்த பங்கு

போர் துவங்கிய உடனேயே ஆகக் குறைந்த கால அளவில் பொருளாதாரம் முழுவதையும் யுத்தத்தேவைகளின் அடிப்படையில் முடுக்கி மறு சீரமைப்பது இன்றியமையாததாகி விட்டது. இதற்கு உற்பத்தி குண்டோட்ட வேகத்தில் நடக்க வேண்டும். உழைப்பதற்கு புதிய பேரளவான ஊழியர் தேவை. இதற்கான நடவடிக்கைகளை சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியும், பாதுகாப்பு கவுன்சிலும் மும்முரமாக எடுக்கலாயின.

சோவியத் பெண்கள் உழைக்கும் மகளிர் கட்சியின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக முன்வந்தனர். ஆயிரக் கணக்கான இல்லத்தரசிகள் இளம்

ரால் நந்தா நினைவுச் சின்னம் நாட்டப்பட்டுள்ளது.

யந்திரங்கள் புனைவு உலோகத்தொழில். எரிபொருள் மின் விசைத் தொழில்கள் இத்தியாதியிலும் டாங்கிகள் போர் விமானங்கள் ஆயுதங்கள் உற்பத்தி சாலைகளிலும் மகளிர் புரிந்த பணி வெகு முக்கியமானது. உயிர் நாடியானது. நாட்டின் தற்பாதுகாப்பு விஷயத்தில் பரம நிர்ணயமானது.

களைச் சுட்டு வீழ்த்தும் களங்களிலும், முதலுதவிப் படைகளிலும் அலுப்புச் சலிப்பின்றி அரும்பணி புரிந்தனர்.

தாயகத்தைக் காக்க வேண்டிப் போர்முனையில் சமர் புரிவோரின் வேலைப் பளுவை எளிதாக்கவும் குறைக்கவும் தம் ஆற்றலுக்கேற்ப சகலத்தையும் செய்தனர். இப்பெண்மணிகள். கம்பளி சாக்ஸ்கள் முடைந்தும், உள்ளாடைகள் தயாரித்தும்

2 ஆவது உலக யுத்தத்தின் போது ஹிட்லரின் பாசிச அரசு தொடுத்த போரை எதிர்த்து தமது நாட்டைக் காக்க சோவியத்யூனியன் மக்கள் மேற்கொண்ட வீரப்போரில் பெண்கள் பங்கு மகத்தானது. 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஆயுதமேந்திக் களத்தில் இறங்கினர் யுத்த காலத்தில் பெண்கள் மாத்திரம் 17 இலட்சம் லீற்றர் இரத்ததானம் செய்தனர்.

தும் குழந்தைகளே. அவர்களது உடல்நலம் பாதிக்கப் பட்டது. ஆனால் அவர்களது நல்வாழ்வு கருதி நல்ல பல ஏற்பாடுகளை நாடு செய்திருந்தது. 3 முதல் 13 வயது வரையான குழந்தைகளுக்கு விசேஷ சத்துணவுக் கூடங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய சாலைகளில் 8 லட்சம் குழந்தைகளுக்கு உணவு தரப்பட்டது. உடல்நலம் கெட்ட குழந்தைகள் தனிப்பட்ட ஆரோக்கிய விடுதிகளுக்கு மாற்றப்பட்டனர்.

போரில் மிகப்பல குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாயினர்: ஆனால் சோவியத் தாய்க்குலத்தின் அன்புள்ளமும் அக்கறையும் காரணமாக நாட்டில் வீடற்

ஒரு சேர வழங்கிய நூற்றுக் கணக்கான குழந்தை இல்லங்கள் போர்க் காலத்தில் நிறுவப்பட்டன. சமூக காப்பீட்டு நிதி தொழிற்சங்கங்கள் பொது மக்கள் பண உதவியால் இவை நிர்வகிக்கப்பட்டு வந்தன.

போரின் அழிவுத்தீ படராத பகுதிகளிலும் - ஜார்ஜியா, உஸ்பெகிஸ்தான், தத்தார் குடும்பங்களிலும் - ஆயிரக் கணக்கான ருஷ்யன், உக்ரேனியன், பிலோ ருஷ்யன் இனத்தவர் குழந்தைகள் பெற்றோரை இழந்த நிலையில் எதிரிகள் பற்றாடல் செய்த பகுதிகளில் இருந்து பெயர்த்துச் செல்லப்பட்டுப் பேணிக் காக்கப்பட்டனர்.

இந்த இடர்பாடான கால கட்டத்தில் மகளிரின் சமூக அரசியல் செயற்பாடுகள் அளவிலும் வீச்சிலும் அதிகரித்தன. இவர்களில் ஆயிரக் கணக்கானோர் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினர்களாயினர். கட்சி மகளிரை முக்கியமான பதவிகளில் நியமனம் செய்து கௌரவித்தது:

1944 இல் உறுப்பு குடியரசுகளின் சுப்ரீம் சோவியத்

குண்டு வீச்சினாலும் ஷெல் அடியினாலும் தகர்க்கப்பட்டவீடுகளிலிருந்து உயிரைக்காப்பாற்றுவதற்காக உடுத்த உடையுடன் வெளியேறி அகதிமுகாமில் தஞ்சமடைந்திருப்பவர்கள்பரீட்சைக்குத்தோற்றுவதற்காகப் பாடப் புத்தகங்களை மறக்காமல் எடுத்து வந்திருக்க முடியுமா?

திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் வீடுவீடாகப் புகுந்து தமிழ் இளைஞர்களை கைது செய்தும் சித்திரவதை செய்தும் அட்டகாசம் புரியும்போது அவர்கள் அடுத்தமாதம் தோற்றவிருக்கும் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சைக்கு வரவிருக்கும் கேள்விகள் பற்றியும் அதற்கான விடைகள் பற்றியும் ஒரு கணமேனும் சிந்திக்க முடியுமா?

சிங்களக் காடையர்கள் இப்பகுதிகளில் இளைஞர்களையும் யுவதிகளையும் குறிவைத்து நுழையும்போது அவர்களிடமிருந்து உயிரையும் உடலையும் காப்பாற்றிக் கொள்வதற்கு பாதுகாப்பான இடம் தேடி ஓடுவார்களா பரீட்சையைப் பற்றிச் சிந்திப்பார்களா?

திருக்கோணமலையிலிருந்து வள்ளங்களிலும் காடுகள் வழியாகவும் அலைந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக யாழ். குடாநாட்டுக்கு வரும்போது அடுத்தமாதப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆயத்தங்களுடன் வரமுடியுமா?

இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் இன்று அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்து அடுத்தவேளை உணவுக்காகக் காத்திருக்கின்றனர். மாற்றிக்கொள்ள உடை கிடைக்குமா என்ற ஏக்கத்திலிருப்பவர்கள் பலர். இந்த முகாம்களில் உணவுக்கும் உடைக்கும் காத்திருப்பவர்கள் அடுத்தமாதம் பரீட்சைக்குத் தோற்றுவது பற்றி யாராவது சிந்திக்கும் நிலையிலிருக்க முடியுமா?

பலநாள் பட்டினி கிடந்து உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு உள்ள பொருள்களையும் பயணத்துக்குச் செலவிட்டு தமிழ் நாட்டில் தமது பெற்றோருடன் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் இளம்பிள்ளைகள் அடுத்த மாதம் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இலங்கைக்கு வந்து திரும்ப முடியுமா?

கடந்த சில மாதங்களாக வடக்கிலும் கிழக்கிலும் கல்லூரிகள் இயங்கவில்லை; தனியார் கல்விக்கூடங்கள் மூடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.

நாடும் மக்களும் படுகிறபாட்டில் பரீட்சை ஒரு கேடா என்ற விரக்திமனப்பான்மையில் இளம் உள்ளங்கள் நொந்து போயிருக்கின்றன.

தென்னிலங்கையின் ஜே.வி.பி. பிரச்சினையைவைத்து கடந்த வருடம் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை பின்போடப்பட்டது.

சமீபத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டதை தொடர்ந்து சம்பிரதாயப்படி தேர்தல் ஆணையாளர் வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்வதற்கு தேதிகுறிப்பிட்டு அறிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து சில தினங்களுக்குள்ளேயே பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என்று கூறித்தேர்தல் பின்போடப்பட்டதாக அறிவித்தது.

ஒருநாள் தேர்தலையே வடக்கு கிழக்கில் நடத்த முடியாதென்றால் பத்துப் பதினைந்து நாட்களுக்கு நடைபெறும் ஜி. ஸி. ஈ. (உயர்தரம்) பரீட்சையை எப்படி நடத்த முடியும்?

இந்தப் பரீட்சையை நாடுதழுவிய முறையில் காலவரையின்றி ஒத்திவைக்கவேண்டும், இல்லையேல் இப் பரீட்சையை தமிழ்ப் பகுதிகள் ஒற்றுமையாகப் பகிஷ்கரிக்கவேண்டும். வேறு வழியில்லை.

---

**போர்** துவங்கிய உடனேயே ஆகக் குறைந்த கால அளவில் பொருளாதாரம் முழுவதையும் யுத்தத்தேவைகளின் அடிப்படையில் முடுக்கி மறு சீரமைப்பது இன்றியமையாததாகி விட்டது. இதற்கு உற்பத்தி குண்டோட்ட வேகத்தில் நடக்க வேண்டும். உழைப்பதற்கு புதிய பேரளவான ஊழியர் தேவை. இதற்கான நடவடிக்கைகளை சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியும், பாதுகாப்பு கவுன்சிலும் மும்முரமாக எடுக்கலாயின.

சோவியத் பெண்கள் உழைக்கும் மகளிர் கட்சியின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக முன்வந்தனர். ஆயிரக் கணக்கான இல்லத்தரசிகள் இளம் பெண்கள் மாணவியர் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலைகளைப் பொறுப்பேற்க ஓடோடி வந்தனர், முன் நாட்களில் ஆண்கள் மட்டுமே செய்து வந்த பல பணிகளை அவர்கள் திறம்பட நிர்வகித்தனர். உரிய பயிற்சிகளை வெகு வேகமாகப் பெற்றுத் திறனடைந்தனர். நேரடி வேலையில் ஈடுபட்டு யந்திரங்களுடன் மல்லடித்து நடைமுறைத் தேர்ச்சி பெற்றனர். நல்லதோர் அனுபவம் பெற்றனர். 1942 இறுதிக்குள் பொருளாதாரத்தின் துறைகள் அனைத்திலும், உற்பத்தியின் சகல கிளைகளிலும் பெருமளவு ஆண்களுக்கு மாற்றீடாக பொறுப்பு மேற்கொண்டனர்.

நாட்டின் முதலாவது பெண் உருக்குத்தொழிலாளி போரின் போது ஸ்டாலின் கிராடில் இருந்த கிராஸ்னி அக்தியாபர் உலோக ஆலையில் பணிபுரிந்தாள். ஒல்கா கொவலேவா என்பதுஅவள் பெயர். ஆகஸ்ட் 23, 1942-நாள் உருக்குப்பணி முடித்த கையோடு அவள் நாசகாரி படைப்பிரிவில் சேர்ந்து போர் புரிய விரைந்தாள் நாட்டுக்கு உயிர் கொடுத்த இந்த நங்கை நல்லாள் பெயரால் நந்தா நினைவுச் சின்னம் நாட்டப்பட்டுள்ளது.

யந்திரங்கள் புனைவு உலோகத்தொழில். எரிபொருள் மின் விசைத் தொழில்கள் இத்தியாதியிலும் டாங்கிகள் போர் விமானங்கள் ஆயுதங்கள் உற்பத்தி சாலைகளிலும் மகளிர் புரிந்த பணி வெகு முக்கியமானது. உயிர் நாடியானது. நாட்டின் தற் பாதுகாப்பு விஷயத்தில் பரம நிர்ணயமானது.

> 2 ஆவது உலக யுத்தத்தின் போது ஹிட்லரின் பாசிச அரசு தொடுத்த போரை எதிர்த்து தமது நாட்டைக் காக்க சோவியத்யூனியன் மக்கள் மேற்கொண்ட வீரப்போரில் பெண்கள் பங்கு மகத்தானது. 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஆயுதமேந்திக் களத்தில் இறங்கினர் யுத்த காலத்தில் பெண்கள் மாத்திரம் 17 இலட்சம் லீற்றர் இரத்ததானம் செய்தனர். ஆண்களுக்கு மாற்றீடாக தொழிற்சாலைகளிலும், விவசாயப் பண்ணைகளிலும் பணிகளை முழுமையாக மேற்கொண்டனர். மருத்துவம், சமூகசேவை, கட்சிப்பணி என்பவற்றிலும் பெருமளவில் ஈடுபட்டனர்.

விவசாயத்தைப் பொறுத்த வரை பண்ணை வேலைகளின் பளுமுழுவதுமே மகளிர் கரங்களில் சரிந்தது. 1945க்குள் கூட்டுப் பண்ணைத் தொழிலாளிகளில் முக்கால் வாசி பெண்களே. இந்தக் கடின மான கால கட்டத்தில் இவர்கள் ஊக்கமும் உள்வலியும் ஊறுபடா வினைத்திறனும் கொண்ட அமைப்பாளராகத் திகழ்ந்தார்கள். அபாரமான முன் முனைப்புடன் பாடுபட்டார்கள். பண்ணை வேலை அணிகளின் தலைவியராய் கால்நடைப் பண்ணைகளின் நிர்வாகிகளாய் சோவியத் கிராமங்களில் சோர்வின்றி உழைத்தனர் மகளிர்.

போர் நடைபெற்ற ஆண்டுகளில் மகளிர் தொழில், விவசாயம் எனும் துறைகளில் பணிபுரிவதோடு நின்றுவிடவில்லை. துவக்க முதலே ஆயிரக் கணக்கான மாதர் பாதுகாப்பு அரண்கள் கட்டுவதிலும், போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் களங்களிலும், முதலுதவிப் படைகளிலும் அலுப்புச் சலிப்பின்றி அரும்பணி புரிந்தனர்.

தாயகத்தைக் காக்க வேண்டிப் போர்முனையில் சமர் புரிவோரின் வேலைப் பளுவை எளிதாக்கவும் குறைக்கவும் தம் ஆற்றலுக்கேற்ப சகலத்தையும் செய்தனர். இப் பெண்மணிகள். கம்பளி சாக்ஸ்கள் முடைந்தும், உள்ளாடைகள் தயாரித்தும் போராளிகளை ஊக்குவித்து உணர்ச்சியூட்டும் கடிதங்கள் எழுதியும் பல வழிகளில் உதவினர். மாதர் தோற்றுவித்த இந்த மாபெரும் அக்கறையை நினைவுபடுத்தும் தந்தையரும் தாத்தாமாரும் எழுதிய கடிதங்கள் பல இதற்கு இன்றும் சாட்சியம் வகிக்கின்றன.

டாங்கிகள், விமானங்கள், பீரங்கிகள் நிர்மாணிக்க இப் பெண்கள் நிதி திரட்டினார்கள். தமது சேமிப்புக்கள் அனைத்தையும் பாதுகாப்பு நிதிக்கு மனமுவந்து கொடையாக அளித்தனர். நகைகள் அலங்காரப் பொருட்களை வழங்கினர். இரத்ததானம் செய்தனர். போர் நாட்களில் இரத்ததானம் செய்தவர்களில் 90 சதவிகிதம் பேர் தையலரே. அவர்கள் 1,700,000 லீட்டர் இரத்ததானம் செய்தனர் எனில் இது அற்புத சாதனை யல்லவோ!

போரினால் அதிகம் துன்புற்றதும் தொல்லைப்பட்டதும் குழந்தைகளே. அவர்களது உடல்நலம் பாதிக்கப்பட்டது. ஆனால் அவர்களது நல்வாழ்வு கருதி நல்ல பல ஏற்பாடுகளை நாடு செய்திருந்தது. 3 முதல் 13 வயது வரையான குழந்தைகளுக்கு விசேஷ சத்துணவுக் கூடங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய சாலைகளில் 8 லட்சம் குழந்தைகளுக்கு உணவு தரப்பட்டது. உடல்நலம் கெட்ட குழந்தைகள் தனிப்பட்ட ஆரோக்கிய விடுதிகளுக்கு மாற்றப்பட்டனர்.

போரில் மிகப்பல குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாயினர். ஆனால் சோவியத் தாய்க்குலத்தின் அன்புள்ளமும் அக்கறையும் காரணமாக நாட்டில் வீடற்றலையும் குழந்தைகள் எவருமே இருக்கவில்லை.

மாஸ்கோ கிராஸ்னியி பொகாதிர் ஆலையைச் சேர்ந்த அவ்சின்னிக் கோவா எனும் அன்னைதான் பெற்றோரைப் பறிகொடுத்த இரு பச்சிளங் குழந்தைகளுக்குப் புகலிடம் தந்து வளர்ப்புத் தாயாக முன்வந்த முதல் பெண்மணியாவார். இவளது இந்த உத்தம உதாரணத்தை ஆயிரக் கணக்கான அன்னையர் பின்பற்றினார்கள். அநாதையர் என்று எவருமில்லை நாட்டினில் என்று ஆர்த்துரைத்தனர் இவர்கள்.

ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு இருப்பிடமும் உணவும், உடையும், கல்வியும் [...] கணக்கான ருஷ்யன், உக்ரேனியன், பிலோ ருஷ்யன் இனத்தவர் குழந்தைகள் பெற்றோரை இழந்த நிலையில் எதிரிகள் பற்றாடல் செய்த பகுதிகளில் இருந்து பெயர்த்துச் செல்லப்பட்டுப் பேணிக் காக்கப்பட்டனர்.

இந்த இடர்பாடான கால கட்டத்தில் மகளிரின் சமூக அரசியல் செயற்பாடுகள் அளவிலும் வீச்சிலும் அதிகரித்தன. இவர்களில் ஆயிரக் கணக்கானோர் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினர்களாயினர். கட்சி மகளிரை முக்கியமான பதவிகளில் நியமனம் செய்து கௌரவித்தது.

1944 இல் உறுப்பு குடியரசுகளின் சுப்ரீம் சோவியத் நாடாளுமன்றங்களில் பாதிக்கு மேல் பெண்களே அங்கம் வகித்தனர். பிராந்திய வட்டார நிர்வாகக் குழுக்களில் 60 சத விகிதம் மகளிரே.

இந்த மகத்தான தேச பக்தப் போரில் பத்து லட்சம் பெண்கள் ஆயுதமேந்தித் தம் தாய் நாடு காக்கப் போரிட்டனர். தீர்மானகரமான யுத்த அரங்குகளில் அவர்கள் சமர் புரிந்தனர். கெரிலாப் படைகள் தலைமறைவாக இயங்கிய கட்சி அமைப்புகள் இவற்றில் பங்கு பற்றினர்.

இத்தகைய வீரசாகசங்களுக்காக 150,000 பெண்கள் விருதுகள். பதக்கங்கள் பெற்றுள்ளனர். 86 பேர் சோவியத் வீரர் என்னும் பாராட்டுப் பெற்றனர்.

நாட்டின் சமூக – அரசியல், பொருளாதார வாழ்வில் சோவியத் மகளிர் வகித்த பாத்திரமும் அவர்களது செய்திறனும், மனப்பூர்வமான பற்றுறுதியும், வீரமும் தீரமும் எதிரிகளை முறியடித்து வெற்றிவாகைசூடுவதற்கு முக்கியமான கருவிகளாக இருந்து வந்தன. போர் எனும் பயங்கர சோதனையில் சோவியத் பெண்கள் தமது இணைவரையற்ற தேச பக்தியை. சோஷலிஸ்டுத் தாயகத்தின் பாலானபரவசப் பேரன்பை, கட்சியின் லட்சியத்திடம் ஆழ்ந்த அர்ப்பணிப்பை நிதர்சனப்படுத்திக் காட்டிவிட்டார்கள். புதிய சோஷலிஸ்டு மகளிர் அணியின் சிறப்பியல்புகளை வெளிக் காட்டினார்கள். போர் ஆண்டுகளில் சோவியத் மகளிர் தாயின் தன்னிகரற்ற தனிச் சின்னமாகக் காட்சி தந்தார்கள். நாட்டின் சுதந்திரத்திற்கும் சுயாதீனத்துக்கும் தன்னலமறுப்புடன் தீவிரமாகப் போராடும்படி தம் புதல்வர் புதல்வியருக்கு உத்வேக மூட்டினார்கள்.

(விடுதலைக்கு வழிவகுத்த வெற்றித்திருநாள் என்னும் நூலில் இருந்து)

## கருணாநிதி-சிங் சந்திப்பு

(டில்லி)

பிரதம மந்திரி வி. பி. சிங் தமது பதவி விலகல் சம்பந்தமாக எடுத்த முடிவை மறு பரீசீலனை செய்ய வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் தேசிய முன்னணித்தலைவர் என். டி. ராமராவ் விடுத்த அழைப்பின் பேரில் டில்லி சென்ற மு. கருணாநிதிஇவ் வேண்டுகோளை பிரதம மந்திரி வி. பி. சிங்குக்கு விடுத்திருந்தார்.

## பாகிஸ்தான் சமாதானம் செய்து வைக்கத் தயார்

(இஸ்லாமாபாத்)

ஈரானுக்கும் - ஈராக்கிற்கும் இடையில் சமாதானம் அமைதியை ஏற்படுத்த தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்தது.

ஈரானிய ஜனாதிபதிரவ்சன் யானியும், ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசெயினும் இதற்குதவபாகிஸ்தானில்சந்தித்துப் பேச வேண்டும் என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அதிகாரி ஒருவர் கூறினார்.

# பொலிட் பீரோவில் இருந்து உளவுப் பிரிவினர் நீக்கம்

(மொஸ்கோ)

சோவியத் கம்யூனிச கட்சியின் ஆட்சி மன்றக் குழுவான பொலிட் பீரோவில் இருந்து சில முக்கிய தலைவர்கள் விலக்கப் பட்டுள்ளனர்.

பிரதம மந்திரி, இராணுவத் தலைவர். கே.ஜி. பி. உளவுத்தாபன தலைவர் ஆகியோர் உட்பட பல முக்கிய தலைவர்கள் ஜனாதிபதி கொர்பசேவினால் பொலிட் பீரோவில் இருந்து விலக்கப் பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற கம்யூனிச கட்சி மாநாட்டின் முக்கிய முடிவாக இது எடுக்கப்பட்டுள்ளது.

கட்சிக்கும், அரசுக்கும் இடையே தெளிவான ஒரு தலைமை இருக்கவேண்டும் என்றே இத்தகைய மாற்றங்களை எடுத்திருப்பதாக ஜனாதிபதி கொர்பசேவ் அறிவித்துள்ளார்.

இவர்களின் இடத்திற்கு குடியரசுத் தலைவர்களை நியமிக்கப் போவதாகவும், இதற்கு முன்னோடியாக 15 குடியரசுத் தலைவர்களை நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Registeredas News Paper at the G. P. O.

# ஈழநாதம்

வடமராட்சியில்

## பல்கலைக்கழக மாணவரால் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஸ்ரீலங்கா இனவெறி அரசினால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பு நடவடிக்கையையும், வடக்கு-கிழக்கு பகுதிகளில் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி மக்களை பட்டினிச்சாவுக்கு உட்படுத்துவதையும் கண்டித்து வடமராட்சிப்பகுதி யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்றுகாலை 9மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் முன்பாக ஆரம்பிக்கப்படும்.

# இன அழிப்பு நடைபெறுகின்றது; பரீட்சை பற்றி சிந்திக்க முடியாது

## தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கெதிராக யுத்தப் பிரகடனத்தை மேற்கொண்டு இலங்கை அரசு இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

தமிழின அழிப்பானது, கடற்படை இராணுவம், பொலிஸ் விமானப்படைகளால் மட்டுமன்றி சிங்களக் காடையர்களுக்கும் ஆயுதம் வழங்கிக் கொடூரமான முறைகளில் குற்றுயிராகவும், உயிராகவும் ரயர் போட்டுக் கொளுத்தப்படுகின்றனர். இலங்கை அரசின் இன அழிப்பு நடவடிக்கை வடக்கு - கிழக்கில் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டாலும், கிழக்கு மாகாணம் முழு அளவில் பாதிப்படைந்து மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கீழ் வரும் காரணங்களால் தமிழீழ மாணவர் நலன் கருதி க. பொ. த. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி ஆவணி 10 ஆம் திகதி நடைபெறாது ஒத்தி வைக்குமாறு அரசைக் கேட்கின்றோம்.

அரசு இவ்வாறு பரீட்சையை ஒத்திவைக்காத சந்தர்ப்பத்தில் பகிஷ்கரிப்பதனைத் தவிர வேறு வழியெதுவும் எமக்குப் புலப்படவில்லை. இவ்வாறான மாணவர் கோரிக்கைக்கு சகல மாணவர்களும், ஆசிரியர்களினதும், பாடசாலை அதிபர்களினதும், கல்வித் திணைக்கள அதிகாரிகளினதும், மற்றும் பொது ஸ்தாபனங்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம் என தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தமிழ்

கல்வி உளவியல் சார்ந்தது ஆகையால் இந்த சூழ்நிலையில் மாணவர்கள் பரீட்சை எழுதமுடியாதிருப்பதுடன் இலங்கை அரசு மாணவர்கள் ஒன்றுகூடியிருக்கும் போது விமான, ஷெல் தாக்குதல்களால் மாணவர்கள் பெருமளவில் அழிக்கப்படலாம். இன்று பாடசாலை, வைத்தியசாலை பயணிகள், அப்பாவிகள்என்று தெரிந்து கொண்டே விமானத்தாக்குதலை மேற்கொள்வது இவ்வாறான இனஅழிப்பு நடைபெறுவதை உறுதிப்படுத்துகிறது.

பாடசாலைகள் யாவும் அகதிகள் முகாமாக்கப் படுகிறது. அரசின் இராணுவ நடவடிக்கையால் வடக்கு கிழக்குப் பாடசாலைகளில் பாடத்திட்டம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை-

வடக்கு கிழக்கில் அரசு இன்று பொருளாதாரத் தடை விதித்து, வடக்கு கிழக்கில் அத்தியா அவசியப் பொருட்கள் கூட இல்லாத நிலையில் வாடிநிற்கும் நாம் கல்வியைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கிறோம். எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்து தடைப்பட்டிருக்கின்றது. யுத்தப் பிரகடனமும், பொருளாதாரத்தடையும் ஒரு பிரதேசத்தில் மேற்கொண்டு அப்பகுதியில் பரீட்சை நடாத்தி சர்வதேச சமூகத்திற்கு சுமுகமாகவாழ்க்கை நடைபெறுகின்றது. என்பதனை எடுத்துக்காட்ட முனையும் இலங்கை அரசின் முகமூடிகளைக் கிழித்தெறிய வேண்டும்.

இராணுவ முகாம்களில் அல்லது அதன் சூழலில் பரீட்சை நடாத்தி மாணவர்களை பண

சிய விடுதலைப் போராட்டமாகும். இந்நிலையில்இலங்கை அரசுஇதனைஅழிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளும் போது மாணவர்களின் உயிர்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் கல்வியைப் பற்றி சித்திக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கை அரசுக்கு துணை போவதாகவே அமையும்.

மாணவர்களாகிய நாம் இன்றைய சூழ் நிலையில் சிந்தித்து செயற்பட வேண்டியது தவிர்க்க முடியாதது. எமது நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்த துணை போகக்கூடாது.

1987 ஆம் ஆண்டு மார்கழியில் நடைபெற வேண்டிய க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை இராணுவ நடவடிக்கைகளால் 1988 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு பிற்போடப்பட்டது. பின்பு இந்திய இராணுவத்தின் சமூகவிரோதக்கும்பல்களால் கட்டாய இராணுவப்பயிற்சிக்கு மாணவர்கள் கைது செய்யப்பட்ட போது 4 மாதகாலம் வகுப்புக்கள் நடைபெறவில்லை. தென்பகுதியில் ஜே. வி. பி. நடவடிக்கை காரணமாக ஒரு மாத வகுப்புக்கள் அரசினாலேயே திட்டமிட்டபடி நடைபெறவில்லை. இதனால் மொத்தம் ஒரு வருட காலக் கல்வியை இழந்துள்ளோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பிக்கு மக்கள் ஆயிரக்கணக்கில் அஞ்சலி

(அச்சுவேலி)

சனிக்கிழமை மாலை யாழ் நகரில் வீர மரணமடைந்த வீரவேங்கை லெப்டினன்ட் அம்பிக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அச்சுவேலியில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நாவற்காடு அச்சுவேலியை சேர்ந்த வீரவேங்கை அம்பி (சித்தர் கனகரத்தினம்) பழைய பூங்காவில் சனி மாலை வீரமரணமடைந்தார். அம்பியின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் அச்சுவேலி பஸ் நிலையத்தில் பிற்பகல் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அம்பிக்கு அஞ்சலி செலுத்தி அச்சுவேலி வர்த்தக நிலையங்கள் எல்லாம் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒலிபெருக்கியில் உணர்ச்சிக் கீதங்கள் ஒலிக்கப்பட்டது.

பஸ் நிலையத்தில் வைக்கப்பட்ட பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்குப் பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு அழைப்பு

### புலிகளுடனான

திரிகை தனதுஆரிசியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது

அரசாங்கத்தினால் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் போர் நீண்ட காலத்துக்கு நீடிக்கும் என்று தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எங்கும் இரத்த ஆறு ஓடும் நிலை ஏற்படும் என்று ''தி ஐலண்ட்'' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது:

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடரப்போகும் நீண்ட நாள் யுத்தத்தில் அரசு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் நிலைமை உருவாகும் என்றும் அந்தப் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் எச்சரிக்கை செய்துள்ளது

### வெளியார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் வி. பி சிங் அரசியலில் அனுபவமுள்ளவரானதால் இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் தலையிட மாட்டாரென்றும் பிரேமதாசா சொன்னார்.

### கொக்காவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை நோக்கி 2 மணி நேரத்திற்கு மேலாகக் குண்டுமாரி பொழிந்தன. துப்பாக்கிவேட்டுக்களையும் தீர்த்தன.

153 ஆம் கட்டையிலுள்ள தென் இந்திய திருச்சபை, தேவாலயம், வீடுகள், இரணைமடுச் சந்தி விவசாய பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், றான்ஸ்போமர் ஆகியன சேதமாகின. பொது மக்கள் சிலர் காயமடைந்தனர்.

கனகாம்பிகைகுளத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால்கிளிநொச்சியிலுள்ளஒரே ஒரு உல்லாசப் பயணிகள் விடுதியான ''ராங் வியூ ஹோட்டல்'' சேதமடைந்தது கால்நடைப் பண்ணையில் விழுந்த குண்டினால் மாடுகள் இறந்தன.

## சிற்றூரவை அங்கத்தவர்களுக்கு மக்கள் முன்னணி வேண்டுகோள்

இடம்பெயர்ந்திருக்கும் சிற்றூரவை செயற்குழு உறுப்பினர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் இன அழிப்பு காரணமாக சொந்த கிராமங்களை விட்டு இடம்பெயர்ந்திருக்கும் சிற்றூரவைகளின் நிர்வாகக்குழு உறுப்பினர்களும், உறுப்பினர்களும் தற்போது தங்கியிருக்கும் இடங்களுக்கு அருகிலுள்ள வட்ட செயலகங்களிலும் கிராமசெயலகங்களிலும் தமது பெயரையும் சொந்த முகவரி, சிற்றூரவையில் வகிக்கும் பதவி தற்போது தங்கியிருக்கும் முகவரி ஆகியவற்றை பதிவு செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அமைப்பாளர்
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

### கைதுசெய்யப்பட்ட

என்றும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சிங்களவர்கள் இந்தியக் கடல் எல்லையை அத்துமீறியுள்ளது இதுவே முதல் சம்பவம் என்றும் பொலிஸ் பகுதியினரால் குறிப்பிடப் பட்டுள்ளது.

### இரு விமான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் இருந்த இரு குண்டு வீச்சாளர்களே இறந்ததாக அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது. ஹெலிகப்டர் பறந்து கொண்டிருக்கும் போது கீழே இருந்து இவ்விமானிகள் சுடப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

### வி. பி. சிங்------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

யாக இருப்பார் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளுடன் சிறிலங்கா பிரச்சினையும் இன்று இந்தியாவுக்கு முக்கியமாக இருப்பதால் இந்திய அமைச்சரவைக்குள் நெருக்கடி ஏற்பட்டு பலவீனமடைய விட முடியாது என்று தேசிய முன்னணித் தலைவர்கள் வற்புறுத்தியதன் பேரில் தமது முடிவை வி. பி. சிங் மாற்றிக் கொண்டாரென முன்னணித் தலைவர் என். ரி. ராமராவ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

திரு. வி. பி. சிங் ஜனதாதள் பாராளுமன்றக் குழுவுக்கு மட்டும் பொறுப்பானவரல்ல என்றும் ஐந்து கட்சிகளுக்கும் அவர் பொறுப்பு என்றும் திரு. ராமராவ் தெரிவித்தார்.

ஹரியானா மாநில முதல்வராகத் துணைப் பிரதமர் தேவிலாலின் மகன் ஓம் பிரகாஷ் செளதாலா மீண்டும் முதல் மந்திரியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று அமைச்சர்கள் பதவி விலகல் கடிதம் கொடுத்ததைத் தொடர்ந்து பிரதமர் பதவியைத் துறப்பதற்கு வி. பி. சிங் முன்வந்தார். இதனைத் தொடர்ந்து மேலும் ஏழு அமைச்சர்கள் பதவிதுறக்க முன்வந்தனர். வி. பி. சிங் பதவி துறப்பு முடிவு பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது. தேசிய முன்னணித் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் டில்லி வந்து ஆலோசனைகள் நடத்தி சிங் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருப்பதற்கு வழிவகுத்துள்ளனர். ஹரியானா முதல்வர் ஓம்பிரகாஷ் செளதாலா பற்றி இனித்தான் தேசியமுன்னணி முடிவுசெய்யவிருக்கிறது

### பொலிஸில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய நேரிடும் என தெரிந்து கொண்டும், இராணுவத்திடம் அடிவாங்க நேரிடும் என அறிந்திருந்தும் நேர்முகப் பரீ

## தெரிந்தால் அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையைச் சேர்ந்த எனது உறவினர்களான 53, சிவன் வீதியிலுள்ள ஜெயரட்ணம் குடும்பத்தினரும், 243, பாரதிபுரத்திலுள்ள அந்தோனிப்பிள்ளை - பரமேஸ்வரி குடும்பத்தினர்களையும் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாரிடமாவதிருந்து அவர்கள் பற்றிய தகவலை ஈழநாதம் மூலம் அறியத்தரும்படி மருமகள் திருமதி ந. றெஜினோல்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண போராட்டம் பற்றி கூறும்பொழுது:

திருக்கோணமலை மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன்பு நாம் ஒரு கிராமத்துக்குசென்றிருந்தோம்: அங்கு

மிட்டபடி ஆவணி 10 ஆம் திகதி நடைபெறாது ஒத்தி வைக்குமாறு அரசைக் கேட்கின்றோம்.

அரசு இவ்வாறு பரீட்சையை ஒத்திவைக்காத சந்தர்ப்பத்தில் பகிஷ்கரிப்பதனைத் தவிர வேறு வழியெதுவும் எமக்குப் புலப்படவில்லை. இவ்வாறான மாணவர் கோரிக்கைக்கு சகல மாணவர்களும், ஆசிரியர்களினதும், பாடசாலை அதிபர்களினதும், கல்வித் திணைக்கள அதிகாரிகளினதும், மற்றும் பொது ஸ்தாபனங்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம் என தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தமிழ் பேசும் மக்களுக்கெதிராக யுத்தப் பிரகடனத்தை மேற்கொண்டு, மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் பேசும் மக்களின் உடைமைகள், உயிர்கள், உறுப்புக்கள், உறவினர்களை இழந்த நிலையில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ருட்கள் கூட இல்லாத நிலையில் வாடிநிற்கும் நாம் கல்வியைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கிறோம். எரிபொருள் தட்டுப்பாட்டால் போக்குவரத்து தடைப்பட்டிருக்கின்றது. யுத்தப் பிரகடனமும், பொருளாதாரத்தடையும் ஒரு பிரதேசத்தில் மேற்கொண்டு அப்பகுதியில் பரீட்சை நடாத்தி சர்வதேச சமூகத்திற்கு சுமுகமாக வாழ்க்கை நடைபெறுகின்றது. என்பதனை எடுத்துக்காட்ட முனையும் இலங்கை அரசின் முகமூடிகளைக் கிழித்தெறிய வேண்டும்.

இராணுவ முகாம்களில் அல்லது அதன் சூழலில் பரீட்சை நடாத்தி மாணவர்களை பணயக்கைதிகளாக்கிக் கொண்டு இலங்கை இராணுவம் முகாம்களிலிருந்து வெளியேறுவதற்குத் திட்டமிட்டிருக்கின்றது. இந்நிலையில் தமிழ் பேசும் மாணவர்கள் அவர்களுக்குத் துணை போக முடியாது.

இன்று தமிழீழத்தில் நடைபெறுவது ஓர் இனத்தின் தே

சனிக்கிழமை மாலை யாழ் நகரில் வீர மரணமடைந்த வீரவேங்கை லெப்டினன்ட் அம்பிக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் அச்சுவேலியில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நாவற்காடு அச்சுவேலியை சேர்ந்த வீரவேங்கை அம்பி (சித்தர் கனகரத்தினம்) பழைய பூங்காவில் சனி மாலை வீரமரணமடைந்தார். அம்பியின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் அச்சு பகல் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அம்பிக்கு அஞ்சலி செலுத்தி அச்சுவேலி வர்த்தக நிலையங்கள் எல்லாம் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒலிபெருக்கியில் உணர்ச்சிக் கீதங்கள் ஒலிக்கப்பட்டது.

பஸ். நிலையத்தில் வைக்கப்பட்ட பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்குப் பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

திற்கு மேலாகக் குண்டுமாரி பொழிந்தன. துப்பாக்கிவேட்டுக்களையும் தீர்த்தன.

153 ஆம் கட்டையிலுள்ள தென் இந்திய திருச்சபை, தேவாலயம், வீடுகள், இரணைமடுச் சந்தி விவசாய பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், றான்ஸ்போமர் ஆகியன சேதமாகின. பொது மக்கள் சிலர் காயமடைந்தனர்.

கனகாம்பிகைகுளத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலினால் கிளிநொச்சியிலுள்ள ஒரே ஒரு உல்லாசப் பயணிகள் விடுதியான ''ராங் வியூ ஹோட்டல்'' சேதமடைந்தது கால்நடைப் பண்ணையில் விழுந்த குண்டினால் மாடுகள் இறந்தன.

கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் கச்சேரி, அரசாங்க வைத்திய சாலை, புனித திரேசா தேவாலயம், இந்துக்கோயில் ஆகியனவும் மற்றும் வியாபார நிலையங்களும் அனாதை இல்லமும் சேதமாகியது.

சனிக்கிழமை காலை முதல் மாலை வரை மீண்டும் இதே மாதிரியான தாக்குதல்கள் இடம்பெற்றன. அதிகாலை கிளிநொச்சி நகரைச் சுற்றி 3 குண்டுவீச்சு விமானங்கள் மாறி மாறி வந்து குண்டுமாரி பொழிந்தன. சந்தை வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பீதியினால் பொருட்களை அந்த அந்த இடங்களில் விட்டுக் குடல் தெறிக்க ஓடினர். சந்தைப் பகுதியில் எந்த வித சேதமும் ஏற்படவில்லை.

நேற்று மாலை வரை தொடர்ச்சியாக விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன. இதனால் பொதுமக்கள் எல்லோரும் குழந்தை குட்டிகளையும், பொதிகளையும் தூக்கிய வண்ணம் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக, விமானத் தாக்குதல் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (49)

முடியாது என்று தேசிய முன்னணித் தலைவர்கள் வற்புறுத்தியதன் பேரில் தமது முடிவை வி. பி. சிங் மாற்றிக் கொண்டாரென முன்னணித் தலைவர் என். ரி. ராமராவ் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

திரு. வி. பி. சிங் ஜனதா தள் பாராளுமன்றக் குழுவுக்கு மட்டும் பொறுப்பானவரல்ல என்றும் ஐந்து கட்சிகளுக்கும் அவர் பொறுப்பு என்றும் திரு. ராமராவ் தெரிவித்தார்.

ஏழு அமைச்சர்கள் பதவிதுறக்க முன்வந்தனர். வி. பி. சிங் பதவி துறப்பு முடிவு பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது. தேசிய முன்னணித் தலைவர்களும், முக்கிய பிரமுகர்களும் டில்லி வந்து ஆலோசனைகள் நடத்தி சிங் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருப்பதற்கு வழிவகுத்துள்ளனர். ஹரியானா முதல்வர் ஓம்பிரகாஷ் சௌதாலா பற்றி இனித்தான் தேசியமுன்னணி முடிவுசெய்யவிருக்கிறது

## உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சகல மாணவ மாணவிகளும் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சை சம்பந்தமான கலந்துரையாடலுக்கு இன்று திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு பின்வரும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும்படி தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் வேண்டிக்கொண்டுள்ளது.

பாடசாலைகளின் பெயர் விபரம் வருமாறு;

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பளை மகா வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், விக்னேஸ்வரா கல்லூரி, யூனியன் கல்லூரி, விக்ரோரியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, சோமாஸ்கந்தக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் சமுகமளிக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்.

மேலும் தூர இடங்களில், கல்வி பயிலும் மாணவர்கள் தமக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

### கப்பல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராமதாஸ் நேற்றுத் தெரிவித்தார்.

இராமநாதபுரம், மண்டபம், மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய புதிய முகாம்கள் அகதிகளுக்காக அமைக்கப்பட்டு வருவதாகவும், அகதிகளைத் தங்கவைக்க இராணுவத்திடமிருந்து கூடாரங்கள் தருமாறு உதவி கேட்டிருப்பதாகவும் திரு. ராமதாஸ் சொன்னார்.

தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் அகதிகளில் பெரும்பாலானவர்கள் தலைமன்னாரிலிருந்தும், பேசாலையிலிருந்தும் வருவதாகத் தெரிவித்த திரு ராமதாஸ் இன்னும் ஐம்பதாயிரம் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வருவதற்குக் காத்திருப்பதாக அகதிகள் கூறியதாகவும் சொன்னார்.

தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவதைச் சிறிலங்கா கடற்படையினர் தடுத்து வருவதாகவும் இதனால் தமிழ் நாட்டிலிருந்து கப்பல் அனுப்பி அகதிகளை ஏற்றிவர வேண்டும் என்று அகதிகள் கேட்டதாகவும் திரு. ராமதாஸ் கூறினார்.


வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

74/1 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

நியூ லலிதா ஸ்தாபனத்தார்

(B 1258)


### பனையால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை வன்செயலிலிருந்து தமது சகோதரியுடனும் மைத்துனருடனும் தப்பி ஓடி வரும் போது வழியில் தமிழ் பேசும் ஒரு ''புண்ணியவான்'' வீட்டில் ஒரு இரவைக் கழித்த போது 20 ஆயிரம் ரூபா பணமும், 23 பவுண் தங்க நகைகளும் அபகரிக்கப்பட்டுவிட்டதாம். திருமலையில் வன்செயல் பீதியில் சிதறி ஓடிய போது நெருங்கிய உறவினர் சிலர் கொடுத்த நகைகளும், பணமும்கூட இதில் அடங்கி இருந்ததாம்' குடும்பத்தில் 6 சகோதரிகளுக்கு இவர் ஒருவர்தான் ஆண் சகோதரம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் ''பனையால்'' விழுந்த குடும்பத்தை ''மாடேறி மிதித்த'' கதையாகி விட்டது இளைஞர் பாலச்சந்திரனின் கதை. க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவனான பாலச்சந்திரனின் சகோதரியும், மைத்துனரும் தற்போது அகதிகளாகத் தங்கி உள்ள கச்சேரி கிழக்கு ஒழுங்கையிலுள்ள இல்லத்திலிருந்து அனைத்தையும் இழந்தோமே என்று அழுது புலம்புகிறார்கள். (75)

### குருநகர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளம் காண்பதற்காக 'ஈழநாதம்' காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பழுதடைந்த நிலையில் இருந்த சடலத்தை விடுதலைப் புலிகள் கரைசேர்த்து யாழ். ஆசனக்கோவில் சேமக்காலையில் பூதவுடல் நேற்று பிற்பகல் அடக்கம் செய்யப்பட்டது. (21)

### யாழ் கடற்கரையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை மண்டைதீவுக் கரையில் பதினைந்தும் இருபது வயதும் மதிக்கத்தக்க இரண்டு பெண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின. இதே கரையில் பன்னிரெண்டு வயது மதிக்கத்தக்க சிறுவனின் சடலமும் ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமும் ஒதுங்கின.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டி தென்கரையில் பன்னிரெண்டு வயது மதிக்கத்தக்க சிறுவனின் சடலமும், மூன்று பெண்களின் சடலங்களும் கரை ஒதுங்கின.

கரை ஒதுங்கிய இந்தப் பெண்களின் சடலம் ஒன்றில் சங்கிலியும், மோதிரமும் இருக்கக் காணப்பட்டன. நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணியளவிலும் ஒரு ஆணின் சடலம் இதே கரையில் வந்து ஒதுங்கியது.

### பூநகரிக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றை ஸ்ரீலங்கா கடற்படை சில தினங்களுக்கு முன்பு மூழ்கடித்ததில் அகப்பட்டவர்களின் சடலங்களாக இருக்கலாமென ஊகிக்கப்படுகிறது.

படகில் பயணம் செய்த பதின்நான்கு பேர்கள் நீந்தி தமிழகக் கரையை அடைந்ததாக செய்திக் குறிப்பொன்று கூறுகிறது. (21)

### இராணுவத்தால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் பலம் இன்று அதிகரித்துள்ளது என்றும் மேஜர் ஜெனரல் சில்வா கூறினார்.

விடுதலைப்புலிகளின் கண்ணி வெடியில் முப்பத்தாறு சிறிலங்கா சிப்பாய்கள் கால்களை இழந்து விட்டனரென்றும் அவர் சொன்னார்.

### பொலிஸில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய நேரிடும் என தெரிந்து கொண்டும், இராணுவத்திடம் அடிவாங்க நேரிடும் என அறிந்திருந்தும் நேர்முகப் பரீட்சைகளுக்கு சென்றிருந்தனர்

அச்சமயம் யாழ். கோட்டை பொலீஸ் அதிகாரி எமது மாவட்ட தளபதியை அழைத்து நேர்முகப் பரீட்சையை ஒழுங்காக நடத்தி வைக்க எமக்கு சில உதவி ஒத்தாசைகள் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஏனெனில் அவர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவு இளைஞர்கள் வந்திருந்தனர்.

ஆனால் இப்பொழுது எமது மண்ணின் விடுதலைக்காக, எமது மக்களின் விடுதலைக்காக, எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் ஒரே நோக்கோடு போராட நாம் அழைக்கின்றோம். அதற்கு முன்வருவோர் எவருமில்லை ஆனால் இன்றும் எமது இளைஞர்கள் சிங்களவனிடம் அடிபணிந்து வாழ்வதையே மேலாக நினைப்பது வெட்கப் படக்கூடியதாகும்,

என நேற்று இடம்பெற்ற மண்மீட்பு நிதிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை வைத்திலிங்கம் வித்தியாசாலையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் கிழக்கு மாகாண போராட்டம் பற்றி கூறும்பொழுது:

திருக்கோணமலை மாவட்டத்தில் சில வாரங்களுக்கு முன்பு நாம் ஒரு கிராமத்துக்குசென்றிருந்தோம். அங்கு நடந்த ஒரு கூட்டத்தில் சில பெரியவர்கள் எம்மை நாடி இந்த கிராமத்தில் ஒரு புலிக் கொடி ஏற்றப்பட வேண்டும் என விருப்பம் தெரிவித்தனர். இந்த கொடி ஏற்றப்பட்டால் அங்கு மீண்டும் ஒரு இக்கட்டானநிலைமைவரும்பொழுது அந்தக் கொடியை ஏற்றியவர்கொலைசெய்யப்படுவார் அந்தக் கிராமத்து மக்கள் தாக்குதலுக் குள்ளாவார்கள். அந்த கிராமத்து வீடுகள் தீக்கிரையாக்கப்படும் என்பதைத் தெரிந்துகொண்டும் அவர்கள் இந்த விருப்பத்தை தெரிவித்திருந்தனர்.

இந்த நிலைமையை நாம் அவர்களுக்கு கூறிய பொழுது அவர்கள் சொன்னார்கள், திருக்கோணமலையில் தொன்மை வாய்ந்த கோணேசர் ஆலயத்தை பார்த்தபடி ஒரு புலிக்கொடி பறக்கட்டும். அதுவே எமது விருப்பம் என்றார்கள். நாம் நினைத்தது போலவே இப்பொழுது அந்த கிராமம் எரிக்கப்பட்டு இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டு விட்டது. ஆனால் அந்த மண் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (லோ)

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

**யாழ். மாவட்டம்**

**பொதுச் சபைக் கூட்டம்**

இடம் : நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை (நல்லூர் பின் வீதியில்)

காலம் : 18 - 07 - 90 (புதன் கிழமை)

நேரம் : காலை 9 - 00 மணி

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் சகல உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப் படுகின்றனர்.

– செயலாளர்

(B 1263)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது